பொது சுற்றறிக்கை இல.: 02/28/2013
திகதி: 14/02/2013

# தாய்-சேய் சுகாதார வைத்திய அதிகாரிகளின் கடமைப் பட்டியல்

## 1.0 நிர்வாகத் தேவைகள்

1.1 தாய்-சேய் சுகாதார வைத்திய அதிகாரியானவர் மாவட்ட தொழில்நுட்ப குழுவின் ஒரு உறுப்பினராவதுடன் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு சகல தாய்-சேய் சுகாதார சேவைகளையும் பொறுத்தமட்டில் பொறுப்புடையவருமாவார்.

தாய்-சேய் சுகாதார சேவைகள் பின்வரும் அம்சங்களைக் உள்ளடக்கியது:
- தாய் மற்றும் பச்சிளஞ்சிசு சுகாதாரம்
- பாடசாலை மற்றும் கட்டிளைஞர் சுகாதாரம் உள்ளடங்களாக சிறுவர் சுகாதாரம்
- குடும்பத் திட்டமிடல்
- பெண்கள் சுகாதாரம்

1.2 தாய்-சேய் சுகாதார வைத்திய அதிகாரியானவர் குடும்ப சுகாதாரப் பணியகத்தின் தொழில்நுட்ப வழிநடத்துதல் மற்றும் வழிகாட்டல்களுக்கு அமைய குறித்த மாவட்டத்திற்குள் தாய்-சேய் சுகாதார சேவைகளின் அமுலாக்கத்திற்காக சேவையாற்றுவார்.

1.3 பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அலுவலகத்தின் தாய்-சேய் சுகாதாரப் பிரிவில் காரியாலயத்தை அவர் பேணுதல் வேண்டும். காரியாலயப் பேணுகைக்கான வழிகாட்டல்கள் பின்னிணைப்பு-1ல் தரப்பட்டுள்ளது.

1.4 கடமை நேரங்கள்:
- கிழமை நாட்கள் - மு.ப. 8.30 தொடக்கம் பி.ப. 4.15 வரை
- சனி-ஞாயிற்றுக்கிழமைகள் மற்றும் பொது விடுமுறை நாட்கள் - விடுமுறை
- தேவையேற்படுமெனின் கடமை நேரங்களின் பின்பும் மற்றும் விடுமுறை தினங்களிலும் பணியில் ஈடுபட தயாராக இருக்க வேண்டும்.

1.5 தாய்-சேய் சுகாதார வைத்திய அதிகாரியானவர் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் அனுமதிக்கப்பட்ட மாதாந்த முன்னீட்டு நிகழ்ச்சித்திட்டத்திற்கு அமைய கடமையாற்றுவார். இம்மாதாந்த முன்னீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு பிரதியானது முன்னைய மாதத்தின் 25ஆம் திகதிக்கு முன்னதாக மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளருக்கும், தாய்-சேய் சுகாரார பணிப்பாளருக்கும் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

1.6 நாளேடு ஒன்றினை சுகாதார அமைச்சின் அறிவுறுத்தல்களுக்கு அமைய பேணுவதுடன் அதனை எதிர்வரும் மாதத்தின் 5ஆம் திகதிக்கு முன்னதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் சமர்ப்பிக்கவும் வேண்டும்.

## 2.0 திட்டமிடல்

2.1 தாய்-சேய் சுகாதார வைத்திய அதிகாரியானவர் மாவட்டத்திற்குட்பட்ட ஒட்டுமொத்த சுகாதார சேவைகளிலும், குறிப்பாக தாய்-சேய் சுகாதார சேவைகளின் நடப்பு நிலைமையிலும் பரிச்சயம் உடையவராக இருத்தல் வேண்டும்.

2.2 கடமைகளை பொறுப்பேற்ற பின்பு முதல மூன்று மாதங்களுக்குள் அம்மாவத்தட்டத்தின் தாய்-சேய் சுகாதார சேவைகளின் நிலைப்பாடு குறித்த அறிக்கை ஒன்றை தயாரித்து பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் சமர்ப்பிப்பதுடன், பிரதி ஒன்றை தாய்-சேய் சுகாதாரப் பணிப்பாளரிடமும் சமர்ப்பித்தல் வேண்டும்.

2.3 தாய்-சேய் சுகாதார சேவைகள் தொடர்பாக மாவட்டத்திலுள்ள பிரதான பிரச்சனைகளை அடையாளம் காண்பதுடன், மாவட்ட தாய்-சேய் சுகாதார அபிவிருத்தி திட்டத்தையும் தயாரித்தல் வேண்டும். மாவட்ட தாய்-சேய் சுகாதார அபிவிருத்தி திட்டமானது பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு சமர்ப்பிக்கப்படுவதுடன், பிரதி ஒன்று தாய்-சேய் சுகாதாரப் பணிப்பாளரிடமும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

2.4 மாவட்டத்திற்குள் திறன்மிகு பிணியாய்வு நிலைய முகாமைத்துவத்திற்காக, சுகாதார வைத்திய அதிகாரிகளினால் தயாரிக்கப்படும் வருடாந்த பிணியாய்வு நிலைய அட்டவணைகளை மீளாய்வு செய்தல் வேண்டும்.

## 3.0 ஒருங்கிணைப்பு

3.1 மாவட்ட மட்டத்தில் தாய்-சேய் சுகாதாரத்திற்கான குவியப் புள்ளியாகச் செயற்படுவதோடு குடும்ப சுகாதார பணியகத்தின் வைத்திய நிபுணர்களுடனும், பணிப்பாளருடனும் சிறந்த ஒருங்கிணைப்பை ஸ்தாபிக்க வேண்டும்.

3.2 மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், ஏனைய மாவட்ட மட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் நிறுவனங்களின் தலைமை அதிகாரிகள் (நிரல் அமைச்சு [line ministry] உட்பட) மற்றும் கோட்ட சுகாதார பணியணியினர் ஆகியோரிடையே சீரான ஒருங்கிணைப்பு பொறிமுறையொன்று ஸ்தாபிக்கப்படுவதை உறுதிப்படுத்துதல் வேண்டும். வைத்தியசாலைகளின் விசேட பிரிவுகளின் வைத்திய நிபுணர்களுடனும், சேவையணியினருடனும் நெருக்கமான இணைவாக்கத்துடன் பணியாற்றுதல் வேண்டும்.

3.3 சுகாதார வைத்திய அதிகாரிகளையும், நிறுவனங்களின் தலைமை அதிகாரிகளையும் தத்தமது பிரிவுகளின்/நிறுவனங்களின் தாய்-சேய் சுகாதார சேவைகளை திட்டமிடவும், அமுலாக்கவும் வழிநடத்துதல் வேண்டும்.

3.4 தாய்-சேய் சுகாதார வைத்திய அதிகாரியானவர் பெருந்தோட்டங்களில் தாய்-சேய் சுகாதார சேவைகளை அமுலாக்குவதற்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு ஒத்துழைப்பு வழங்குதல் வேண்டும்.

3.5 தாய்-சேய் சுகாதாரம் தொடர்பான விடயங்களில் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களை ஆதரித்தல் வேண்டும்.

3.6 தாய்-சேய் சுகாதார சேவைகளை ஒழுங்கமைப்பதற்கும், நடைமுறைப்படுத்துவதற்கும் ஏனைய அரசாங்க திணைக்களங்களுடனும், அபிவிருத்திப் பங்காளிகள் மற்றும் அரச சார்பற்ற முகவரமைப்புகளுடனும் இணைவாக்கத்துடன் பணியாற்றுதல் வேண்டும்.

3.7 மாவட்ட, வலைய மற்றும் கோட்ட மட்டங்களினாலான பாடசாலை சுகாதார ஒருங்கிணைப்புக் கூட்டங்கள், சுகாதார மற்றும் கல்வி அதிகாரிகளுக்கு நடாத்தப்படுவதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

## 4.0 தாய்-சேய் சுகாதார சேவைகளின் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு

4.1 தாய்-சேய் சுகாதார நிகழ்ச்சித்திட்டத்தின் சகல அங்கங்களினதும் வெற்றிகரமான அமுலாக்கத்திற்காக மேற்பார்வைசெய்தலும், அவசியமான வழிகாட்டல்களை வழங்குதலும் வேண்டும். மாவட்ட நிர்வாக மற்றும் தொழில்நுட்ப அதிகாரிகள் (பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் [RDHS], பிராந்திய தொற்றுநோயியலாளர் [RE], பிராந்திய மேற்பார்வையிடும் பொது சுகாதார தாதி அதிகாரி [RSPHNO], கோட்ட மேற்பார்வையிடும் பொது சுகாதாரப் பரிசோதகர் [SPHID]), குழுவொன்றாக மேற்பார்வையில் ஈடுபடுதல் ஊக்குவிக்கப்படல் வேண்டும்.

4.2 ஒரு மாதத்தில் குறைந்தபட்சம் நான்கு தடவையாவது பின்வரும் ஒழுங்கமைப்புகள் மற்றும் பணியணியினர் மேற்பார்வை செய்யப்படுதலானது உறுதிப்படுத்துதல் வேண்டும்.

- சுகாதார வைத்திய அதிகாரியின் [MOH] காரியாலயம் (சுகாதாரப் பிரிவுகள்)
- தாய்-சேய் சுகாதார/குடும்பத்திட்டமிடல்/சுகவனிதயர் பிணியாய்வு நிலையங்கள்
- நிறுவனங்கள் (பிரசவ அறை, மகப்பேற்று கூடங்கள் [maternity wards], தாய்-சேய் சுகாதார/குடும்பத்திட்டமிடல்/சுகவனிதயர் பிணியாய்வு நிலையங்கள்)
- பிராந்திய மருத்துவ விநியோகங்கள் பிரிவு [Regional Medical Supplies Division]
- பொது சுகாதார தாதி சகோதரியின் [PHNS] காரியாலயங்கள்
- மேற்பார்வையிடும் குடும்பநல சுகாதார மருத்துவமாதின் [SPHM] காரியாலயங்கள்
- பாடசாலைகள்

மாவட்டத்திற்குள் மருத்துவமனைகள் மேற்பார்வையிடப்படும்போது நிறுவனத்தின் தலைமை அதிகாரிகள் அறிவிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

ஏனைய மேற்பார்வையிடும் அதிகாரிகளினால் வேண்டுகோள்கள் விடுக்கப்படுமிடத்து தாய்-சேய் சுகாதார வைத்திய அதிகாரியானவர் குடும்பநல சுகாதார மருத்துவமாதுகள்/களம் [PHMM/field] மேற்பார்வையிடலாம்.

4.3 நடாத்திய அனைத்து மேற்பார்வையிடல்களுக்குமான அறிக்கைகள், பரிந்துரைகளுடன் எழுதப்படல் வேண்டும். இவ் அறிக்கைகள் அனைத்தும் 2 வார கால எல்லையினுள் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கும், அதன் பிரதிகள் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பரிந்துரைக்கு அமைய தலைமை நிறுவனத்திற்கும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். தொடர்-கவனிப்பு நடவடிக்கைகள் [follow-up actions] மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

4.4 பிணியாய்வு நிலைய மற்றும் வெளிக்கள தாய்-சேய் சுகாதார சேவைகளை நெருக்கமாக கண்காணிப்பதுடன் அவற்றின் தொடர்ச்சியான தொழிற்பாட்டையும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

4.5 சுகாதார வைத்திய அதிகாரிகளின் மாதாந்த கலந்துரைகளுக்கு [monthly conferences] ஒழுங்காகப் விஜயம் செய்வதுடன், சேவைகளின் அமுலாக்கத்தில் அவர்கள் முகம் கொடுக்கும் பிரச்சனைகளிலும் கவனம் செலுத்துதல் வேண்டும். புதிய கோட்பாடுகள் [concepts], சுற்றறிக்கைகள் [circulars] மற்றும் வழிகாட்டல்கள் [guildlines] போன்றவற்றில் பணியணியினர் தொழில்நுட்ப ரீதியில் இற்றைப்படுத்தப்பட்டு [updated] இருத்தல் வேண்டும். நிகழ்ச்சித்திட்ட அமுலாக்கத்தின் முன்னேற்றங்கள் மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும்.

4.6 தாய்-சேய் சுகாதாரம் தொடர்பான சகல அறிக்கைகளும் குறித்த நேரத்தில் தாய்-சேய் சுகாதார வைத்திய அதிகாரியினால் பெற்றுக்கொள்ளப்படுவதை உறுதிப்படுத்துதல் வேண்டும். தாய்-சேய் சுகாதார அறிக்கை [H-509], மாதாந்த குடும்பத் திட்டமிடல் அறிக்கை [H-1200 B], மாதாந்தக் குடும்பக்கட்டுப்பாட்டு கையிருப்பு அறிக்கை [H-1158], ஒன்றுதிரட்டிய குடும்பத் திட்டமிடல் அறிக்கை [H-1159], விரிவாக்கப்பட்ட நீர்ப்பீடன நிகழ்ச்சித்திட்ட காலாண்டு அறிக்கை [E-86], பாடசாலை சுகாதார காலாண்டு அறிக்கை [H-797], மகப்பேற்றுப் புள்ளிவிபரவியல் அறிக்கை [H-830] ஆகியனவற்றின் மீது விசேட கவனத்தை செலுத்துவதுடன் சுகாதார வைத்திய அதிகாரிகளிடமிருந்தும், வைத்தியசாலைகளிலிருந்தும் பெற்றுக்கொள்ளப்படும் சகல அறிக்கைகளிலும் உள்ள தரவுகள் சரிபார்க்கப்படுதல் வேண்டும். தாய்-சேய் சுகாதார வைத்திய அதிகாரி இவ்வறிக்கைகளில் உள்ள குறைகளை கண்டறிந்து சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு அவற்றை தெரியப்படுத்துவதுடன் தேவையான திருத்தங்கள் செய்யப்படுவதையும் அனைத்து மட்டங்களும் அறிவிக்கப்பட்டிருத்தலையும் உறுதிசெய்தல் வேண்டும்.

4.7 மாவட்ட மட்டத்தில் சீரான மீளாய்வுகளின் நடாத்துகையை ஒழுங்கமைத்தல் வேண்டும்.

- ஆண்டொன்றிற்கு இருமுறை நடப்பு வருடத்திற்கான மாவட்ட தாய்-சேய் சுகாதார/விரிவாக்கப்பட்ட நீர்ப்பீடன நிகழ்ச்சித் திட்ட மீளாய்வுகளும், ஆண்டுக்கு ஒருமுறை கடந்த வருடத்திற்கான தேசிய தாய்-சேய் சுகாதார/விரிவாக்கப்பட்ட நீர்ப்பீடன நிகழ்ச்சித் திட்ட மீளாய்வும்.
- மாவட்ட மற்றும் தேசிய மகப்பேற்று இறப்பு மீளாய்வுகள்.
- சிறப்பு நிபுணத்துவமுடைய நிறுவனங்களில் மாதாந்த பிறப்பைச்சூழ்ந்த-சிசு மரண கலந்துரைகள் [Peri-natal Death Conferences].

சகல சிறப்ட நிபுணத்துவமுடைய மகப்பேற்று பராமரிப்பு நிறுவனங்களிலும் தலைமை நிறுவனங்களினதும், வைத்திய நிபுணர்களினதும் உதவியுடன் தா.சே.சு.அ. ஆனவர் ஒருங்கிணைந்து அனைத்து வைத்திய நிபுணர்கள் உள்ள நிறுவனங்களிலும் மாதாந்த சிசுமரண கலந்துரையாடல்களை நடாத்துதல் வேண்டும்.

4.8 சுகாதாரக் கல்வி அதிகாரிகளினால் தயார் செய்யப்பட்ட சுகாதாரக் கல்வி தொடர்பான ஆண்டுக்குரிய முன்னீட்டு நிகழ்ச்சித்திட்டங்களை சரிபார்ப்பதுடன் அது கோட்ட சுகாதார டணியணியினரின் தேவைகளுக்கு ஏற்ப தயார் செய்யப்பட்டுள்ளதையும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

4.9 H-1160 வடிவமைப்பை உபயோகித்து, தாய்-சேய் சுகாதார வைத்திய அதிகாரியின் காலாண்டு அறிக்கையினை, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரினூடாக, தாய்-சேய் சுகாதார பணிப்பாளருக்கும், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கும், சமர்ப்பித்தல் வேண்டும்.

## 5.0 ஏற்பாட்டியல் முகாமைத்துவம்

5.1 மாவட்டத்தின் தாய்-சேய் சுகாதார/குடும்பத் திட்டமிடல்/சுகவனிதையர் சேவைகளுக்கு வேண்டப்படும் உபகரணங்கள் மற்றும் விநியோகங்களின் தேவைகளை காலத்திற்குக் காலம் மதிப்பீடு செய்வதுடன், மாவட்டத்திற்கென கிடைக்கப்பெறும் நிதிகளிலிருந்து (இலங்கை அரசாங்க, நன்கொடை நிதிகள் [GOSL, donor funds]) அல்லது மத்திய முகவர்களிடமிருந்து உபகரணங்கள் மற்றும் விநியோகங்களைப் பெற்றுக்கொள்ள அவசியமான நடவடிக்கைகளைச் செய்யவேண்டும்.

5.2 சுகாதார வைத்திய அதிகாரிகள் மற்றும் நிறுவனங்களினால், தாய்-சேய் சுகாதார சேவைகளின் வழங்குகைக்கு அவசியமான விநியோகங்களின் சரியான உத்தேச மதிப்பீடுகள் தயாரிக்கப்படுவதற்கு தேவையான வசதிகள் செய்துதரப்பட வேண்டும்.

5.3 பிராந்திய மருத்துவ விநியோகப் பகுதியிலிருந்து [RMSD] மருத்துவமனைகளுக்கும், சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கும் குடும்பக் கட்டுப்பாட்டுப் பொருட்கள், நுண்போசனை மற்றும் பிற மாத்திரைகள் மற்றும் உபகரணங்கள் போன்றவற்றின் சமூக வழங்குகை மற்றும் விநியோகத்தினை உறுதிப்படுத்தும் வகையில் பிராந்திய மருத்துவ விநியோகப் பகுதியுடன் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும்.

5.4 தாய்-சேய் சுகாதார/குடும்பத் திட்டமிடல் ஆகியவற்றின் முகாமைத் தகவல் முறைமையின் அமுலாக்கத்திற்கு தேவைப்படும் அச்சிடப்பட்ட படிவங்களின் உத்தேச மதிப்பீடு, வழங்குகை மற்றும் விநியோகம் ஆகியவற்றை கண்காணிக்க வேண்டும்.

5.5 எல்லாமட்டங்களிலும் தாய்-சேய் சுகாதார சேவைகளுக்குத் தேவையான கையேடுகள் [manuals], வழிகாட்டிகள் [guidelines], சிறு-நூல்கள் [booklets] மற்றும் ஏனைய தகவல், கல்வி மற்றும் தொடர்பாடற் பண்டங்கள் [IEC materials] என்பவற்றின் வழங்குகை மற்றும் விநியோகம் ஆகியவற்றை கண்காணிக்க வேண்டும்.

## 6.0 மனிதவள அபிவிருத்தி

6.1 மாவட்டத்திலுள்ள வெளிக்கள மற்றும் வைத்தியசாலை உத்தியோகத்தர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய தாய்-சேய் சுகாதார சேவைகள் தொடர்பான பயிற்சித் தேவைகளை அடையாளம் கண்டு, அதற்குரிய வருடாந்தப் பயிற்சித் திட்டத்தை தயாரிக்க வேண்டும். குடும்ப சுகாதாரப் பணியகம் மற்றும் இதர மத்திய நிறுவனங்களுடன் இணைவாக்கத்துடன் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கமைத்து நடாத்துதல் வேண்டும். அனைத்துப் உத்தியோகத்தர்களும் அம்மட்டங்களுக்குரிய பயிற்ச்சியைப் பெற்றிருப்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

6.2 தாய்-சேய் சுகாதார நிகழ்ச்சித் திட்டங்களை தேவைகளுக்கேற்பவும் குடும்ப சுகாதார பணியகத்தின் அறிவுறுத்தல்களுக்கு இணங்கவும் ஒழுங்கமைத்து நடாத்துதல் வேண்டும்.

6.3 அனைத்து சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயங்களிலும் மாதாந்தக் கலந்துரைகள், உள்ளிடைக் கலந்துரைகள், உட்சேவை பயிற்சிகள் மற்றும் மீளாய்வுக் கூட்டங்கள் என்பன சீராக நடைபெறுவதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

6.4 வெளிக்கள பொதுசன சுகாதார உத்தியோகத்தர்களின் பதவி உயர்வுப் பரீட்சைகளை நடாத்துவதற்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு ஒத்துழைப்பு வழங்குதல் வேண்டும்.

6.5 நியமங்களின் தேவைகளைக் கண்டறிவதுடன், அலுவலர்களை சேவைக்கமர்த்தலிலும் புதிய நியமனத் திட்டங்களிற்கான பரிந்துரைகளை வழங்கியும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிற்கு ஒத்துழைப்பு வழங்குதல் வேண்டும்.

## 7.0 ஏனையவை

7.1 மேலதிக விசாரணை, திட்டமிடல் மற்றும் அமுலாக்கல் தொடர்பான ஆராச்சிகள் போன்றவை தேவைப்படும் தாய்-சேய் சுகாதாரப் பிரச்சனைகளை அடையாளம் காணுதல் வேண்டும்.

7.2 அவசர மற்றும் பேரிடருற்ற [disaster] சூழ்நிலைகளில் தாய்-சேய் சுகாதார சேவைகள் புணருத்தாரணம் அடைதலை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

7.3 பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் நியமிக்கப்படும் யாதேனும் மற்றைய கடமைகளை செயற்படுத்துதல் வேண்டும்.

பொதுச் சுற்றுநிருபம் இல: 1328, இரத்துச் செய்யப்படுகிறது 10.04.1984 இல் வழங்கப்பட்ட

.......................................................
வைத்திய ஆர் ஆர் எம்.எல்.ஆர்.சியம்பலாகொட
பிரதிப் பணிப்பாளர்
பொதுக் சுகாதார சேவைகள்

.......................................................
வைத்திய பீ. ஜீ. மஹிபால
சுகாதார சேவைகள் பணிப்பாளர்
சுகாதார அமைச்சு

## தாய்-சேய் சுகாதாரப் பிரிவின் காரியாலயத்தைப் பேணுவதற்குரிய வழிகாட்டிகள்

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் காரியாலயத்தில் உள்ள தாய்-சேய் சுகாதாரப் பிரிவில் பின்வரும் பதிவேடுகள், வரைபுகள் மற்றும் கோவைகள் பேணப்படுவதையும் இற்றைப்படுத்தப்படுவதையும் [update] உறுதிப்படுத்துதல் வேண்டும்.

1. சனத்தொகை, சுகாதார வைத்திய அதிகாரப் பிரிவுகள், வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய முக்கிய அடையாளங்கள் குறிக்கப்பட்ட மாவட்ட வரைபடம்.

2. இன்றியமையாத புள்ளிவிபரவியல் மற்றும் முக்கிய குறிகாட்டிகள் என்பன தேசிய, மாகாண மற்றும் மாவட்ட ரீதியில் கொடுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
   உதாரணம்: 1. பிறப்பு வீதம் [birth rate]
   2. மகப்பேற்று இறப்பு வீதம் [MMR]
   3. சிசு இறப்பு வீதம் [IMR]
   4. ஐந்து வயதிலும் குறைந்தோர் இறப்பு வீதம் [under-five mortality rate]
   5. பிறப்பைச்சூழ்ந்த-சிசு இறப்பு வீதம் [peri-natal mortality rate]
   6. பிறப்பு நிறை குறைந்தோர் வீதம் [low birth weight rate]
   7. குடும்பத் திட்டமிடல் நிலவுகை வீதம் [contraceptive prevalence rate] (நவீன - தற்காலிக மற்றும் நிரந்தரம்; இயற்கை/பாரம்பரியம்)

3. மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகள், மகப்பேற்று விடுதிகள், மத்திய மருந்தகங்கள் மற்றும் தாய்-சேய் சுகாதார பிணியாய்வு நிலையங்களின் விபரங்கள்.

4. பிரதேச செயலாளர் காரியாலயங்கள், உள்ளூர் அரசாங்க நிறுவனங்கள் மற்றும் வலையக் கல்வி காரியாலயங்களின் விபரங்கள்.

5. ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரப் பிரிவிற்கும் பின்வரும் கோப்புக்கள் பேணப்பட வேண்டும்.
   அ) குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்களின் [PHM] பிரிவு எல்லைகள், பொது சுகாதார பரிசோதகர்களின் [PHI] பிரிவு எல்லைகள், பொது சுகாதார தாதிச் சகோதரிகளின் [PHNS] பிரிவு எல்லைகள் மற்றும் பிணியாய்வு நிலையங்கள் குறிக்கப்பட்ட சுகாதார வைத்திய அதிகாரப் பிரிவின் வரைபடம்.
   ஆ) சுகாதார வைத்திய அதிகார [MOH] பிரிவுகள், பொது சுகாதார தாதிச் சகோதரி [PHNS] பிரிவுகள், பொது சுகாதார பரிசோதகர் [PHI] பிரிவுகள், குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர் [PHM] பிரிவுகள் ரீதியில் சனத்தொகை.
   இ) பிணியாய்வு நிலைய வேலைத்திட்ட அட்டவணைகள் (வெளிகள நிறை அளவீட்டு வேலைத்திட்ட அட்டவணைகள் உட்பட)
   ஈ) உட்சேவைப் பயிற்சி, மாதாந்தக் கலந்துரைகள் மற்றும் விஷேட நிகழ்ச்சித்திட்டங்களின் திகதிகள்.
   உ) சுகாதார வைத்திய அதிகாரப் பிரதேசத்திலுள்ள மேற்பார்வை அலுவலர்களின் விபரங்கள்.
   ஊ) மேற்பார்வை அலுவலர்களின் முன்னீட்டு நிகழ்ச்சித்திட்டங்கள்.
   எ) மேற்பார்வை வேலைத்திட்ட அட்டவணைகளும், மேற்பார்வை அறிக்கைகளும்.
   ஏ) அனுமதிக்கப்பட்ட நியமனங்கள், சேவையிலமர்த்தப்பட்டோர் எண்ணிக்கை மற்றும் வெற்றிடங்கள் உட்பட நியமனங்களின் தகவல்கள்.
   ஐ) பாடசாலைகள், முன்பள்ளிகள், அரச சார்பற்ற நிறுவனங்கள் [NGOs], தனியார் மருத்துவ நிலையங்கள், முதியோர் இல்லங்கள், சிறுவர் இல்லங்கள் மற்றும் சுகாதாரம் தொடர்பான இதர நிறுவனங்கள்.

6. கடந்த இரு ஆண்டுகளுக்கு வருடாந்த அடிப்படையிலும், நடப்பாண்டிற்கு காலாண்டு அடிப்படையிலும் பின்வரும் பிரதான செயலாக்கச் சுட்டிகள் [performance indicators], பகுத்தாய்ப்பட்டு சுகாதார வைத்திய அதிகாரப் பிரிவுகள் ரீதியாக காட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

   அ) கர்ப்பமுற்ற தாய்மாரின் விரைவில் பதியப்படுதல்.

   ஆ) பிரசவத்திற்கு பின்னான கவனிப்பின் பிரசித்தம் [coverage]

   இ) குடும்பக்கட்டுப்பாட்டு நிலவுகை வீதம் [contraceptive prevalence rate] (நவீன - தற்காலிக மற்றும் நிரந்தரம்; இயற்கை/பாரம்பரியம்)

   ஈ) DPT-1/ஐங்கூட்டு-1, மீசில்ஸ், MR நிர்பீடனமாக்கலின் பிரசித்தம் [immunization coverage]

   உ) பிறப்பு நிறை குறைந்தோர் வீதம் [low birth weight rate]

   ஊ) 2 வயதுவரையுள்ள பிள்ளைகளில் நிறைக்குறைவின் நிலவுகை [underweight prevalence]

   எ) பாடசாலை மருத்துவ சோதனைகளின் பிரசித்தம் [SMI coverage]

   ஏ) பப் படல சல்லடைக்கழிப்பின் பிரசித்தம் [coverage of PAP-smear screening] (இலக்கு வயதெல்லை குழுவினரிடையே)

   ஐ) ஏற்றுக்கொண்ட முறைகளின் ரீதியாக கடந்த 5 வருட காலப்பகுதியில் மாவட்டத்தில் புதிதாக குடும்பத்திட்டமிடலை ஏற்றுக்கொண்டோரின் போக்கு [trend]

7. மேற்பார்வையிடும் வேலைத்திட்ட அட்டவணை - காலாண்டு அடிப்படையில் மாவட்ட தொழில்நுட்ப குழுவிற்கான பொதுவான ஒரு வேலைத்திட்ட அட்டவணை.

8. மேற்பார்வை அறிக்கைகளுக்கான கோவைகள் மற்றும் நடாத்திய விஷேட செயற்பாடுகளுக்கான ஒரு கோவை.